يا من فاته الحج لا يفتك هذا.

# ஹஜ் தவறி விட்டதா? இதைத் தவறிவிடாதிர்கள்



தமிழ்

تاميلي


ஆசிரியர்:

**கலாநிதி அஷ்ஷெய்க் ஹைதம் முஹம்மத் சர்ஹான்**

முன்னால் மதீனா புனித பள்ளி கலாசாலை ஆசிரியர்,

ம:ஹத் சுன்னாஹ் இணையதள மேற்பார்வையாளர்.


WWW.ALSARHAAN.COM
WWW.MAHADSUNNAH.COM

# ஹஜ் தவறிவிட்டதா? இதைத் தவறிவிடாதீர்கள்!

மக்காவுக்கு சென்று ஹஜ், உம்ரா நிறைவேற்ற ஆசைப்படுவோர் ஏராளம். ஆனால் அதற்கான வசதியோ, சக்தியோ அவர்களுக்கு இருக்காது, இவர்களுக்கு அல்லாஹ் அவன் பேரருளால் ஹஜ், உம்ராவுக்கு நிகரான சிறிய அமல்களை வைத்துள்ளான். அவை வருமாறு:

01. ஃபஜ்ர் தொழுகையை ஜமாஅத்துடன் நிறைவேற்றிய பின் சூரியன் உதயமாகும் வரை அல்லாஹ்வை திக்ரு செய்த வண்ணம் உட்கார்ந்து, பின்னர் இரண்டு ரக்அத்துகள் தொழுதால் அதற்கு பூரண உம்ரா, ஹஜ் நிறைவேற்றிய நன்மை உள்ளது.

02. வீட்டில் வுழூ செய்து கொண்டு குபாஃ பள்ளிக்குச் சென்று ஏதோ ஒரு தொழுகையை நிறைவேற்றினால் அதற்கு உம்ரா செய்த நன்மை உண்டு.

03. ரமலானில் உம்ராவை நிறைவேற்றல். இது நபியவர்களுடன் ஹஜ்ஜை நிறைவேற்றியதற்கு சமமாகும்.

04. வீட்டில் வுழூ செய்து கொண்டு கடமையான தொழுகைக்காக வெளியேறிச் சென்றால் ஹஜ் செய்பவருடைய கூலி போன்றது அதற்குண்டு.

05. வேறு நோக்கம் ஏதுமின்றி சுன்னத்தான ழுஹா தொழுகையை நிறைவேற்ற மாத்திரம் வெளியேறினால் உம்றா செய்தவருடைய கூலி போன்றது அதற்குண்டு.

06. ஹஜ்ஜு க்காக ஒருவரை தயார்படுத்தினால் அல்லது அவருடைய தேவைகளை நிறைவேற்ற பொறுப்பு நின்றால் ஹஜ் செய்பவரின் நன்மை போன்ற அதே நன்மை இவருக்கும் உண்டு.

மேலும் அனைவராலும் நிறைவேற்றக்கூடிய ஹஜ் உம்ராவுக்கு நிகரான வணக்கங்களில் இன்னுமொன்று தான் தொழுகைக்குப் பின்னர் 33 தடவைகள் சுப்ஹானல்லாஹ், அல்ஹம்து லில்லாஹ், அல்லாஹு அக்பர் எனக் கூறுவதாகும்.

அபூஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

நபி ஸல் அவர்களிடம் ஏழை முஹாஜிரீன்கள் வந்து, செல்வந்தர்கள் அந்தஸ்துக்களையும் நிரந்தர சுவர்க்கத்தையும் இலகுவாக அடைந்து விடுகின்றனர். ஏனெனில், எம்மைப் போன்று தொழுது, நோன்பு நோற்று அவர்களின் செல்வங்களிலிருந்து ஹஜ் செய்து தானதர்மமும் செய்கின்றனர் என முறையிடனர். அதற்கு நபி ஸல் கூறினார்கள்:

உங்களுக்கு முன் சென்றோரை நீங்கள் அடைந்து, உங்களுக்கு பின்வருவோரால் உங்களை அடைய முடியாத, மிகச்சிறந்த மகான்களாக நீங்கள் மாற உங்களுக்கு வழி சொல்லட்டுமா? நீங்கள் ஒவ்வொரு தொழுகைக்குப் பின்னாலும் சுப்ஹானல்லாஹ், அல்ஹம்துலில்லாஹ், அல்லாஹு அக்பர் என்று 33 தடவை கூறுங்கள் என கற்றுக் கொடுத்தார்கள். (இப்னு மாஜாஹ்:764)